மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு மே தினத்திலும் ஒவ்வொன்றையும் மாநகராட்சியாக ஆக்கவேண்டு மென்ற குறிப்பு இல்லை. மதுரையைப் பொறுத்தவரையில் அங்கு ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை பல்லாண்டுகளாக இருப்பதாலும், இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் இருப்பதாலும் மதுரை நகரம் மாநகரமாக மாற்றப்பட்டது. ஆனல் இப்போது அந்தப் பிரச்னை மற்றயிடங்களில் எழவில்லை. மக்கள் தொகை வளர்ந்து போதுமான நிதி வசதியும் அங்கு வளர்கிற காலத்தில் இவை கவனிக்கப்படவேண்டியதொன்று அது.

சீர்காழி பேரூராட்சியைத் தரம் உயர்த்தல்

*444 வினு—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

திரு. சி. கணேசன் :

(அ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக்கக் கோரி அப் பேரூராட்சியிலிருந்து தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும்படி அப் பேரூராட்சி லிருந்து தீர்மானம் ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனல் அப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, சீர்காழி பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான எல்லா வசதி பொருந்தி இருந்தும், அந்தப் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அது அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தும், அதை நகராட்சியாக ஆக்கக் கூடாது என்று அந்த நகரத்திலிருந்து ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான தகுதி பெற்று இருக்கிறது. மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அங்கே மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்கிறது. வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதேபோல், வருமானமும் ரூ. 3 லட்சத் திற்கு மேல் இருக்கிறது. எனவே, நகராட்சியாக்குவதற்கான தகுதியை சீர்காழி பெற்று இருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது பற்றிய முடிவை அரசு விரைவில் எடுக்கும்.